[1970 மார்ச் 23

504 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னை கூவம் ஆற்றின் சீரமைப்புத் திட்டத்தின் வேலைகள் எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கூவம் ஆற்றுச் சீர மைப்புத் திட்டம் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிவடை யும் என எதிர்பார்க்கிறேன்.

• 505 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to have a boat club at the Cooum near Napier bridge?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். நேப்பியர் பாலத்தின் கிழக்கே கூவம் ஆற்றின் வலது கரையில் படகு ஓட்டு வோர் கழகத்திற்காகக் கட்டிடம் ஒன்றும், சிற்றுண்டிச்சாலை ஒன் றும், 3.2 லட்சம் ரூபாய் செலவில் கட்டும் செயற்குறிப்பு உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சிந்து நதியின் மீதினிலே, சேர நன்னாட்டிளம் பெண்களுடனே, சுந்தரத் தெலுங்கி னில் பாட்டிசைத்து, தோணிகளோட்டி விளையாடிடுவோம் என்று பாரதியார் சொன்னதைப்போல், கூவம் நதியில் படகு விடும் திட்ட முள்ளதா? அப்படியிருந்தால் அதனை 72-ம் ஆண்டிற்குள் செயல் படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கனவு உலகத்தில் சஞ்சரிக்க வேண்டா மென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் களுக்கு, கூவம் நதி சீரமைப்புத் திட்டத்தை நல்ல முறையில் காண்பிக்க வேண்டுமென்பதற்காக நாளைய தினம் 24-ம் தேதி 4 மணிக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தப் பார்வைக்கு வந்தால் இந்தத் திட்டத்தைப் பற்றி விவரமாகத் தெரிந்து கொள்ளலாம். தேனீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : கூவம் நதி சீரமைப்பு செய்கிற வேலையிலே அமைச்சர்கள் அதைப் போய்ப் பார்ப்பதற்காக தனியே ஒரு ரோடு கூவம் ஆற்றிலே போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதிலே கார்களைச் செலுத்த, அந்த இடம் பிரிட்ஜ் வரை போடுவதற்கு எவ் வளவு செலவானது அந்த ரோடு போடுவதற்கு மாத்திரம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அமைச்சர் களுக்குத் தனியாக ரோடு போட்டதாகத் தகவல் இல்லை. நாளைய தினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் வந்தால் எல்லாம் தெரிந்து கொள்ளலாம்.

1970 மார்ச் 23]

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு? அந்தச் செலவுக்கு ஏற்ப அதற்கு எவ்வளவு வருமானத்தை அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வருமானம் எவ்வளவு என்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை.

திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர் சார், இந்தக் கூவம் சீரமைப்புத் திட்ட வேலையை பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மென்ட் தன்னுடைய பணியாளர்களை வைத்தே வேலை செய்கிறதா அல்லது பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் ' த்ரூ கண்ட்ராக்டர்ஸ் ' இந்த வேலையைச் செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பொதுப்பணித் துறை மேற்பார்வையில் வேலை நடைபெற்று வருகிறது.

DR. H.V. HANDE : sir will the Hon Minister be pleased to tell us the main features of this Cooum Improvement Scheme, the aspects in which the Cooum is going to be improved and whether, after improvement, there is going to be increased navigation? What is the programme the Government has got and has it received any complaint from washermen or laundrymen about the dhobykhana being displaced?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நாளைக்கு நேரிலே வந்தால் எல்லா விவரங்களும் சொல்லுகிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் நதிச் சீரமைப்பு வேலையில் கடற்கரைச் சாலையோரமாகக் கண்ணுக் கெழில் காட்சி தரும் பூங்காக்கள் அமைக்கப்படு கின்றனவே, அதைப்போல் கண்ணுக்கினிய காட்சி தரும் பூங்காக்களை கூவம் நதியின் மற்ற பகுதிகளிலும் அமைப்பதற்கு திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கண்ணுக்கினிய காட்சிகளை அதிகமாக அமைத்தால் அதனால் ஏற்படுகிற ஆபத்தும் அதிகமாகிறது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, கூவம் சீரமைப்புத் திட்டத்தில் வேலைகள், டெண்டர்கள் மூலம் கொடுக்கப்படாமல், நாமினேஷன் மூலம் கொடுக்கப்படுவது உண்மையா? அப்படிக் கொடுப்பதன் விளைவாகப் பல ஊழல்கள் நடப்பது அரசாங்கத் திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றம் சொல்லக்கூடாது. ஊழல் நடந்திருக்கிறது என்றால் அதை நிரூபிப் பதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : ஏற்றுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரம் இப்பொழுது இருக்கிறதா? கேள்வி நேரத்தில் குற்றங்குறை சாட்டுதல் கூடாது.

திரு. க. இராமமூர்த்தி: கேள்வியே, டெண்டர் மூலம் இல்லாமல் நாமினேஷன் மூலம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக்கேளுங்கள்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இந்தக் கூவம் சீரமைப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அதற்கான வேலைகள் காண்டிராக்டர்களுக்கு டெண்டர்கள் மூலம் விடாமல், தனிப்பட்டவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே நாமினேஷன் மூலம் விடப்படுவது உண்மையா? அதன் விளைவாக பல்வேறு விரும்பத்தகாத நிலைமைகள் ஏற்பட்டிருப்பது உண்மையா? இதைப்பற்றி அரசாங்கம் விசாரணை செய்ய முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு, மூன்று கேள்விகள் போட்டால், முதல் கேள்விக்கு உண்மை என்று விடை சொன்னால் தான் அடுத்த கேள்வியைக் கேட்டால் அதற்கு விடை சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பொதுப்பணித் துறை குறிப்பிட்ட விதிமுறைகளின்படி வேலை செய்து வருகிறது. விதிமுறைகளுக்கு உட்பட்டு, டெண்டர்கள் கோரவும், நாமினேஷன் கேட்கவும் அதிகாரமிருக்கிறது. அந்த அதிகாரத்திற்கு உட்பட்டு செயல்பட்டு வருகிறது. எந்தவிதமான குறைபாடுகளும் ஏற்பட்டதாகக் கருத்துக்கள் கிடையாது. வீணாகப் புகார்களைச் சொல்லி வேலைக்குத் தயக்கம் ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பரங்கிப்பேட்டைத் துறைமுகம்

*506 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரங்கிப்பேட்டையை ஒரு துறைமுகமாக்குவதற்கு இம்மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஏற்கனவே பரங்கிப்பேட்டையில் ஓர் துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தில் பல ஆண்டுகளாக யாதொரு வணிகப் போக்குவரத்தும் இல்லாததால், இதை மூடுவதற்கு தமிழக அரசின் ஒப்புதலை மத்திய அரசின் சுங்க இலாகா கோரியது. தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், தமிழக அரசின் துறைமுக அதிகாரியிடமும் கருத்துக்களை கேட்டு அறிந்த பின்னர். இந்த அரசு ஒப்புதலை அளித்துள்ளது.